தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6

**ந.க.எண். 2130/அ1/2018 நாள்: 08.05.2018**

---

பொருள்: பள்ளிக்கல்வி – மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் – மாணாக்கர்களை சுற்றுலா அழைத்து செல்லுதல் சார்ந்து அறிவுரை வழங்குதல் – சார்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள். ந.க.எண்:4167/அ1/2013. நாள்: .08.2013.
2. அரசு கடித எண்:26006/பக.5(1)/2014–1, நாள்:25.08.2014.
3. தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்:3778–1/அ1/2016. நாள்:06.08.2016.
4. தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்:359/அ1/2018. நாள்:08.03.2018

---

பள்ளி மாணவ / மாணவியரை சுற்றுலா அழைத்துச் செல்வது சார்ந்து பார்வையில் உள்ள அரசுக் கடிதம் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகளில் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டு அவை மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர்கள் மூலம் மெட்ரிகுலேசன் பள்ளிகள் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளுக்கு சார்பு செய்யப்பட்டது.

இவ்வாறு அறிவுரைகள் வழங்கப்பட்டும், பள்ளி நிர்வாகங்கள் அதனைப் பின்பற்றாமல் உரிய அனுமதியின்றி பள்ளி மாணவ / மாணவியரை சுற்றுலா அழைத்துச் செல்வதால், அவ்வாறு செல்லும் இடங்களில் கவனக்குறைவினால் விலைமதிப்பில்லாத குழந்தைகளின் உயிரிழப்பு ஏற்படுவதும் நடைபெறுகிறது. இவ்வாறான செயல்களுக்கு பள்ளித் தாளாளர் மற்றும் முதல்வரே முழு பொறுப்பாவார்.

மேற்கண்ட செயல்முறைகளில் மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய விரிவான சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது, குறிப்பாக பார்வை –1இல் காணும் செயல்முறையில் மாணவர்களை சுற்றுலா அழைத்து செல்ல வேண்டுமெனில் நிபந்தனைகளுக்குட்பட்டு **துறையின் உரிய முன் அனுமதி பெற்ற பின்னரே அழைத்து செல்ல வேண்டும்** என திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், தற்போது சென்னையிலுள்ள ECI மெட்ரிகுலேசன் பள்ளி மாணவர்களை துறையின் எவ்வித முன் அனுமதியும் பெறப்படாமல் மகாராட்டிர மாநிலம் பூனேவிலுள்ள முல்சிஅணைக்கு அழைத்து சென்ற போது அதில் துரதிஷ்டவசமாக எட்டாம் வகுப்பில் பயின்ற

மூன்று மாணவர்கள் உயிரிழந்தனர். இது மிகவும் வருத்தமளிக்கும் நிகழ்வாகும். முன் அனுமதியின்றி மாணவர்களை சுற்றுலா அழைத்து சென்றமைக்கும், மாணவர்களின் விலைமதிப்பில்லாத உயிர்இழப்பிற்கும் பள்ளி நிர்வாகமே காரணமாக இருந்துள்ளது. இது போன்ற நிகழ்வுகள் இனி வரும் காலங்களில் ஏற்படாத வண்ணம் கீழ்கண்ட அறிவுரைகளை பின்பற்றுமாறு அனைத்து பள்ளி நிர்வாகத்தினருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலாவிற்கு திட்டமிடல்

- ❖ சுற்றுலா செல்ல உத்தேசித்துள்ள நாளுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே அதற்கான திட்டமிடல் பணி துவங்கப்பட வேண்டும்.
- ❖ சுற்றுலா செல்லவுள்ள இடம் மற்றும் நாட்கள் குறித்த அட்டவணை பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடத்தி கூட்டத்தில் ஒருமித்த கருத்துடன் திட்டமிடப்பட வேண்டும்.
- ❖ சுற்றுலாவின் கால அளவு எக்காரணம் கொண்டும் நான்கு நாட்களுக்கு மிகக்கூடாது.
- ❖ பருவநிலை மற்றும் வானிலை அறிக்கை ஆகியவற்றைக் கொண்டு சுற்றுலாவிற்கான இடம் தேர்வு செய்யப்பட வேண்டும்.
- ❖ சுற்றுலா செல்லவுள்ள நாள், இடம் மற்றும் வாகனம் முடிவு செய்யப்பட்டவுடன் அதுகுறித்து சுற்றுலாவிற்கு வரும் அனைத்து குழந்தைகளின் பெற்றோரிடமும் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டு அவர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

மாணவ/ மாணவியருக்கு விழிப்புணர்வு

- ❖ சுற்றுலா செல்லவுள்ள இடம் குறித்து மாணவ/மாணவியருக்கு எடுத்துக்கூறி அந்த இடங்களில் எவ்வாறு பாதுகாப்பாக நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் குறித்து வகுப்பு எடுக்க வேண்டும்.
- ❖ சுற்றுலாவில், ஒவ்வொரு நாளும் அன்று செல்லவுள்ள இடம், அங்கு எவ்வாறு பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்பது குறித்து மாணவ/ மாணவியருக்கு தெரிவிக்க வேண்டும்.
- ❖ சுற்றுலா செல்லவுள்ள இடத்தில் ஏதேனும் பாதுகாப்பு உபகரணங்கள் தேவைப்படின் அதை ஒவ்வொரு மாணவரும் எடுத்துச் செல்வதை உறுதி செய்ய வேண்டும்.
- ❖ சுற்றுலா செல்லும் இடங்களில் விபத்து ஏற்படும் வாய்ப்பு இருப்பின் அதிலிருந்து எவ்வாறு தற்காத்துக்கொள்வது என்பது குறித்து மாணவ/ மாணவியருக்கு போதிய விழிப்புணர்வு சுற்றுலா செல்வதற்கு முன்பே வழங்கப்பட வேண்டும்.

பாதுகாப்பு ஏற்பாடுகள்

- ❖ பத்து மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் பாதுகாப்பாளராகச் செல்ல வேண்டும்.
- ❖ மாணவிகள் சுற்றுலாவில் பங்குபெற்றால் பத்து மாணவிகளுக்கு ஒரு பெண் ஆசிரியை வீதம் உடன் செல்ல வேண்டும்.
- ❖ ஆறு, ஏரி, குளம், குட்டை, அருவி மற்றும் கடல் போன்ற நீர்நிலைப் பகுதிகளுக்கு செல்லக் கூடாது.
- ❖ மக்கள் நெரிசல் அதிகம் உள்ள இடங்களுக்குச் செல்வது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.
- ❖ பேருந்து மூலம் சுற்றுலா செல்வதாக இருந்தால், இப்பேருந்து முறையாக தரச்சான்று பெற்ற வாகனமா என்பதையும், போதிய அனுபவமுள்ள ஓட்டுநர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- ❖ பேருந்து மூலம் சுற்றுலா செல்வதாக இருந்தால் இரவு 10.00 மணி முதல் அதிகாலை 4.00 மணி வரை பேருந்து பயணம் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.
- ❖ சுற்றுலா செல்லும் மாணவ/ மாணவியருடன் முதலுதவி பயிற்சி பெற்ற ஒரு ஆசிரியர் உடன் செல்ல வேண்டும். முதலுதவிக்குத் தேவையான மருந்துப் பொருட்கள் உடன் கொண்டு செல்லப்பட வேண்டும்.
- ❖ சுற்றுலா சென்ற இடத்தில் எந்த சூழ்நிலையிலும் மாணவர்களை தனியே செல்லவோ அல்லது ஆசிரியரின் துணையின்றி விளையாடவோ அனுமதிக்கக்கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கலாகிறது.
- ❖ சுற்றுலாவின் ஒருபகுதியாக மலையேற்றம் இருப்பின் அதற்கு உரிய வனத்துறை அனுமதியுடன், அதற்கு உரிய வழிகாட்டியுடன் செல்ல வேண்டும்.
- ❖ பேருந்து/ தொடர்வண்டியை விட்டு இறங்கும் போதும், பார்வைக்குப் பின் ஏறும் போதும் மாணவ/ மாணவியர் எண்ணிக்கை ( Roll call) சரிபார்க்கப்பட வேண்டும்.
- ❖ சுற்றுலா நாட்களில் மாணவ/ மாணவியருடன் செல்லும் ஆசிரியர்கள், பள்ளி முதல்வருக்கு அலைபேசி மூலம்அவ்வப்போது சென்றுள்ள இடம், உணவு மற்றும் தங்கும் வசதி குறித்து உடனுக்குடன் தெரிவித்திட வேண்டும்.
- ❖ சுற்றுலாவின் போது வழங்கப்படும் உணவு சுகாதாரமானதாக இருப்பதை உறுதி செய்யவேண்டும்.
- ❖ தெருவோரங்களிலும் நடைபாதைகளிலும் விற்கப்படும் சிற்றுண்டிகளை மாணவ/மாணவியர் தவிர்த்திட அறிவுரை வழங்கவேண்டும்.

- ❖ சுற்றுலா நாட்களில் இரவில் தங்கும் இடம் பாதுகாப்பானதாகவும், விலங்குகள், விஷ ஜந்துக்கள் ஆகியவற்றால் பாதிப்பில்லாதவாறும், மருத்துவ வசதி அருகில் உள்ளவாறும் இருக்க வேண்டும்.
- ❖ சுற்றுலா செல்லும் போது பள்ளி நிர்வாகம் மாணவர்களுக்கு அவர்களுடைய பெயர், பெற்றோர் பெயர், இல்ல முகவரி, பள்ள முகவரி, பெற்றோர் கைபேசி எண், இரத்த வகை போன்ற விவரங்கள் அடங்கிய அடையாள அட்டை வழங்கி அதை மாணவர்கள் அணிந்துள்ளதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பொதுவான அறிவுரைகள்

- ❖ துறையின் முன் அனுமதியின்றி சுற்றுலா அழைத்துச் செல்லக்கூடாது.
- ❖ சுற்றுலா செல்வதற்கு முன் குறைந்தபட்சம் ஒரு மாதம் முன்னதாகவே அனுமதி வேண்டி துறை அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- ❖ மருத்துவ சிகிச்சை மேற்கொண்டுவரும் மாணவ/ மாணவியரை உரிய மருத்துவரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி சுற்றுலா அழைத்துச் செல்லக் கூடாது.
- ❖ சுற்றுலாவின் நோக்கம் கல்வி சார்பானதாக இருக்க வேண்டும்.
- ❖ சுற்றுலா செல்வதால் கற்றல் கற்பித்தல் பணிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக் கூடாது.
- ❖ சுற்றுலா இலாப நோக்குடன் இருக்கக் கூடாது.
- ❖ எக்காரணம் கொண்டும் பெற்றோர்களையோ மாணவர்களையோ கண்டிப்பாக சுற்றுலாவிற்கு வரவேண்டும் என்று நிர்பந்தம் செய்யக்கூடாது.
- ❖ மாணவர்களை சுற்றுலா அழைத்து செல்லும் போது அச்சுற்றுலா தலத்தை பற்றி நன்கு அறிந்த அந்தந்தப் பகுதியைச் சார்ந்த சுற்றுலா வழிகாட்டியை உடன் அழைத்து செல்ல வேண்டும்.

மேற்படி அறிவுரைகளை அனைத்துத் தனியார் உதவி பெறும், சுயநிதி பள்ளிகளுக்கும் அனுப்பி ஒப்புதலைப் பெற்று கோப்பில் வைக்க அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

மேற்படி அறிவுரைகளை அனைத்து மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அனுப்பி ஒப்புதலைப் பெற்று கோப்பில் வைக்க அனைத்து மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

மேற்படி அறிவுரைகளை அனைத்து மழலையர் மற்றும் தொடக்க பள்ளிகளுக்கும் அனுப்பி ஒப்புதலைப் பெற்று கோப்பில் வைக்க அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர்கள்/ மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்.

நகல்.ஆணையர், மாநில மனித உரிமைகள் ஆணையம் அவர்களுக்குப் பணிந்தனுப்பலாகிறது.
நகல். பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களுக்குப் பணிவுடன் அனுப்பலாகிறது.
நகல். பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்குப் கனிவுடன் அனுப்பல்ாகிறது.
நகல். தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களுக்குப் கனிவுடன் அனுப்பலாகிறது.